தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, மார்ச் 10, செவ்வாய்க்கிழமை.

மாசி 26, அட்சய— திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்."

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும்.

1. அறிவிப்பு.

'தினகரன்' மற்றும் 'மாலை முரசு' நாளிதழ்கள் பேரவைக் கூட்டம் குறித்துத் தவறான செய்திகள் வெளியிட்டதற்குக் கண்டனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மற்றும் சேலம் 7—3—1987 தேதியிட்ட 'தினகரன்' நாளிதழில் "முதல்வர் நான்கு நாள் சுற்றுப்பயணம் ; 12 மந்திரிகள் கூண்டோடு சேலம் படை எடுப்பு", "எம். ஜி. ஆருக்கு ஆள் திரட்ட சட்டசபை திடீர் ஒத்திவைப்பு" என்று தலைப்புகள் கொடுத்து செய்திகள் நாளிதழ்களின் முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இதே பொருள் பற்றிய செய்தி சேலம் 7—3—1987 தேதியிட்ட 'மாலை முரசு' நாளிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டப் பேரவைக் கூட்டம் 7, 8 மற்றும் 9—3—1987 ஆகிய நாட்களில் இல்லை என்று அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களால் முடிவு செய்யப்பட்டு, அவைக்கு அறிவிக்கப்பட்டதாகும். அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லா சட்டமன்றக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, அந்த அறிவிப்புக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலும், உள்நோக்கத்துடனும் செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத் தான் பேரவைக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று

அனுமானித்து செய்தி வெளியிடுவது முறையல்ல. இவ்விதமாக அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு உள்நோக்கம் காட்டி, களங்கம் கற்பித்துச் செய்தி வெளியிடுவது, பேரவையின் நடவடிக்கைகளுக்குக் களங்கம் கற்பிப்பதாகவும், அவை நடவடிக்கையைத் திரித்து வெளியிடுவதாகவும் அமைவது மட்டுமின்றி, பேரவையின் உரிமை மீறிய செயலுமாகும்.

எனவே, பேரவை நடவடிக்கைகளுக்கு உள்நோக்கம் கற்பித்து செய்திகள் வெளியிடுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

எனது இந்த அறிவிப்பையும், 'தினகரன்' மற்றும் 'மாலை முரசு' பத்திரிகைகள் அவற்றின் முதல் பக்கத்தில் முக்கியத்துவம் கொடுத்து, ஒருவார காலத்திற்குள் ஏற்கனவே செய்தி வெளியிட்ட அந்த அளவில் பிரசுரிக்க வேண்டுமென்று ஆணையிடுகிறேன்.

2. கவன ஈர்ப்பு.

(அ) திருமங்கலம் தொகுதியிலுள்ள ''அக்கார் கெமிக்கல்ஸ்'' தொழிற்சாலைக் கழிவு நீரால் பாதிப்பு.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, ''திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கூத்தியார்குண்டு அருகில் உள்ள 'அக்கார் கெமிக்கல்ஸ்' தொழிற்சாலையிலிருந்து பெருமளவு வெளிவரும் கழிவு நீர், கழிவுக் காற்றால் சுகாதாரமும், விளை நிலங்கள் பாதிப்பினால் அந்தப் பகுதியில் வாழும் மக்களின் பாதிப்பும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுக்கா, தோப்பூர் கிராமத்தில் திருவாளர்கள் அக்கார் கெமிக்கல்ஸ் நிறுவனம் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 35 மெட்ரிக் டன் எடையுள்ள சுத்தம் செய்யப்பட்ட தார் மற்றும் திடதார், 200 மெட்ரிக் டன் எடையுள்ள சைனா களிமண், சோப்பு, கல் தூள், சிலிகா தூள், சுண்ணாம்புத் தூள், மஞ்சள் காவி முதலியவற்றையும் மற்றும் 150 மெட்ரிக் டன் எடையுள்ள ஜிப்சம் பவுடரையும் தயாரித்து வருகிறது.